முச்சந்தி முரளி




Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 351

செவ்வாய்க்கிழமை
12 நவம்பர் 2024

ஐப்பசி 26
வள்ளுவர் ஆண்டு 2055

# தமிழ்த் தேசியத்தைக் காக்க எம் பின்னே அணிதிரள்க!



## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன் அறைகூவல்

யாழ்ப்பாணம், நவம்பர். 12

இலங்கைக்குப் பெரும் சாபக்கேடாக உள்ள பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் ஜனாதிபதி அநுரவும் செயற்பட்டு வருகின்றார். தமிழ்த் தேசிய நீக்க அரசியல் என்ற ஆபத்து நம்மை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. அந்தச் சதியில் இருந்து தமிழ் மக்களையும், தேசியத்தலைவர் எமது அரசியல் குறியீடாக அடையாளம் காட்டிச் சென்ற தமிழரசுக் கட்சியையும் மீட்கவேண்டிய பொறுப்பு எனக்குண்டு. எனவே தமிழ்த் தேசியத்தைக் காக்க மாம்பழச் சின்னத்துக்கே வாக்களிக்கவேண்டும் – என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

11

## மக்களால் எங்கள் வெற்றி உறுதியாகிவிட்டது!

### அங்கஜன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், நவ. 12

எமது மக்கள் சத்தமில்லாமல் வாக்கிடும் வேலையை செய்து நவம்பர் 14ஆம் திகதி நாட்டுக்கு நாம் 10

## லஞ்சம், ஊழலை ஒழிக்க திசைகாட்டியால் முடியும்!

### கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

நாட்டில் லஞ்சத்தையும், ஊழலையும் இல்லாது ஒழித்து சுபீட்சமான எதிர்காலத்தைத் 11

## ஜே.வி.பி.யின் ஆட்சியிலும் அராஜகம் தொடர்கின்றது!

### சுகாஷ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 12

ஜே.வி.பி.யின் ஆட்சியிலும் பொலிஸாரின் திட்டமிட்ட அராஜகங்கள் தொடர்கின்றன என தமிழ்த் 11

## தமிழ்த் தேசியப் பிரச்சினையை கண்டுகொள்ளவேயில்லை அநுர

### சுமந்திரன் நேற்றுச் சாட்டை

யாழ்ப்பாணம், நவ. 12

மாற்றம் மாற்றம் என்று மாறிமாறி வலியுறுத்தும் ஜனாதிபதி அநுர, தமிழர்களின் தேசிய 09

## மக்களுக்காக சேவையாற்றிய இளையோரை மறவாதீர்கள்!

### மணிவண்ணன் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 12

தமிழ் மக்களுக்காக சேவையாற்றிய இளையோருக்கு இம்முறை தேர்தலில் மக்கள் வாக்களிக்க 11

## தேசியத்தின் பாதையில் பயணப்பட ஒன்றிணைக

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரிந்து பிரிந்து செயலிழந்து விட்டது. ஆதலால், தமிழ்த் தேசியத்தின் 11

## மக்களின் நம்பிக்கையை நாம் பூர்த்தி செய்வோம்!

### வேட்பாளர் கமலரூபன் வாக்குறுதி

யாழ்ப்பாணம், நவ. 12

மக்கள் பழைய அரசியல்வாதிகளை விடுத்துத் தமக்கு நல்லது செய்யக்கூடிய புதியவர்களையே 11

## 13 ஆரம்பப்புள்ளியல்ல அது இறுதியான புள்ளி

### கஜேந்திரகுமார் காட்டம்

யாழ்ப்பாணம், நவ. 12

13ஆவது திருத்தத்தை இனப்பிரச்சினைக்கான ஆரம்பப் புள்ளியென்று கூறி எம்மிடம் திணிப் 11

## 15ஆம் திகதி வரை வடக்கில் கனமழை

### கடற்பகுதிகளும் கொந்தளிக்கும்

10




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் குரல்களாக ஆத்மார்த்தமாக ஒலிப்போம்

## வேட்பாளர் கிருஷ்ணமீனன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.12

**அர்ப்பணிப்பான, ஆத்மார்த்தமான குரல் ஒன்று நிர்க்கதி சமூகமாகவுள்ள தமிழ் மக்களின் குரலாக ஒலிப்பதே பொருத்தமானது. அதற்கமைய தமிழ்த் தேசியத்துக்கான அடையாளத்தை தந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குரலான - இளைய சமுதாயமான எமக்கு ஆணை தாருங்கள்.**

- இவ்வாறு நேற்றுமுன்தினம் திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது யாழ். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவரும் சுயேச்சைக்குழு 13 இல் கரும்பலகைச் சின்னத்தில் போட்டியிடும் கிருஷ்ணமீனன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் ரீதியான போராட்டத்திலும் சரி ஆயுத வழியிலான விடுதலைப் போராட்டமாயினும் சரி யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆழமான வகிபாகம் என்பது தவிர்க்கமுடியாதது.

இன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் பல கூறுகளாகச் சிதைந்து தென்னிலங்கைப் பேரினவாத தரப்பின் எடுபிடிகளின் ஏவல்காரர்களாக சுயநல அரசியல் நோக்கிய பயணத்தில் செல்கின்றது. இவ்வாறான நிலையில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தில் இருந்து அர்ப்பணிப்பான, ஆத்மார்த்தமான குரல் ஒன்று தமிழ் மக்களின் குரலாக ஒலிப்பதே பொருத்தமானது. எனவே இளைய சமுதாயமான எமக்கு மக்கள் ஆணை வழங்கவேண்டும்- என்றார். (ச-26)

# அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்க்கவேண்டும்

**வேட்பாளர் சிறீபவானந்தராஜா தெரிவிப்பு**

முதலில் எமது மக்களின் அடிப்படை, அன்றாட, வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அனைத்து மக்களும் சமஉரிமையோடு சமகௌரவத்தோடு வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் திசைகாட்டியில் களமிறங்கியுள்ள யாழ். போதனா மருத்துவமனையின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சிறீபவானந்தராஜா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளாகவுள்ள இளையோர் விடுவிக்கப்படவேண்டும். யாழ். குடாநாட்டு மக்களின் பெரும் சொத்தாகவுள்ள கடல்வளமும் மீன்வளமும் அந்நியர்களிடம் பறிபோவதைத் தடுத்து எமது மீனவர்களின் வளத்தைப் பாதுகாக்கவேண்டும். மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளையும் முடக்கப்பட்டுள்ள கைத்தொழிற் பேட்டைகளையும் மீளத் திறப்பதுடன் புதிய கைத்தொழில் முயற்சிகளையும் உருவாக்கி வேலைவாய்ப்புகளை எமது பகுதி இளையோருக்கு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

ஊழலைப் போன்றே எம் சமூகத்திலிருந்து போதைப்பொருள் எனும் அரக்கன் களையப்படவேண்டும். மக்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளை நான் நன்கறிவேன்.

தமிழ் மக்களின் சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ள என்னாலியன்ற உதவிகளைச் செய்வேன் - என்றார். (ச)

# நாடாளுமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடு ஆராய்வு

நாடாளுமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுத் திங்கட்கிழமை மாலை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து 13ஆம் திகதி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுடன் செல்லும் பேருந்துகளின் போக்குவரத்து ஒழுங்குகள், முறைப்பாடுகளுக்கான உடனடி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஜே.காலிங்க ஜெயசிங்க, மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், யாழ்ப்பாணச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லு.சூரிய பண்டார, யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை உதவிச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-66)

# அநுரவின் 'சிஸ்டம் சேஞ்' தமிழருக்கு பரிகாரமல்ல!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.12

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் 'சிஸ்டம் சேஞ்' என்ற நிகழ்ச்சி நிரலில் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை. எனவே தமிழ்த் தேசியப் பிரச்சினையைக் கையாளக்கூடியவர்களை நாடாளுமன்றம் அனுப்பவேண்டும்.

-இவ்வாறு ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருகைதந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது கட்சி, அரசாங்கத்தை அமைத்தால் பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் உள்ளிட்ட பல விடயங்களை செய்வதாகத் தெரிவித்தார். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் மாறான கருத்துகளை தெரிவிக்கிறார்.

அவர்களின் ஊழல் இலஞ்ச ஒழிப்புக்கு மட்டும் ஆதரவளிக்கலாம். ஆனால் 'சிஸ்டம் சேஞ்' என்ற நிகழ்ச்சி நிரலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நிலை இல்லை.

அடுத்த ஒரு வருடத்துக்குள் இலங்கைக்கு 60 இலட்சம் சீனச்சுற்றுலாப் பயணிகளை அனுப்புவதாக இலங்கையின் ஜனாதிபதி அநுரவுக்கு சீனத்தரப்பு வாக்குறுதி அளித்துள்ளதாக சிங்களப்பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சீனக்கடன்களால் தான் இலங்கை இந்தளவு தூரம் வங்குரோத்து நிலையை அடைந்து இன்னும் அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கிறது. இந்த நிலையில் 60 லட்சம் சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் சீனா என்ன பொறியை இலங்கைக்கு வைத்துள்ளது என்பது குறித்து எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் - என்றார். (ச-இ)

# தமிழ்த் தேசிய இருப்பை உறுதிப்படுத்த வாக்கிடுக

## காண்டீபன் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் தேர்தல் ஆதாயத்துக்கானவை அல்ல. மாறாக இனத்தின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கானவை. இதை மக்கள் உணர்ந்துள்ளதால், இம்முறை நாம் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் காண்டீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தமது இருப்பை தக்க வைப்பதற்காக தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்கவேண்டிய ஒரு கட்டாய சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கான ஆதரவுத் தளம் தற்போது பலம் பெற்று வருகிறது. ஆதலால், முன்னணி வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் நிச்சயமாக அறுதிப் பெரும்பான்மையைப் பெறும்.

நாடெங்கிலும் வீசுகின்ற அலை என்பது வெறுமனே தெற்கிலே ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையே குறித்து நிற்கிறது. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்த சிங்கள தேசம் ஊழல் ஒழிப்புக்கான மாற்றம் எனும் வெற்றுக் கோஷத்தின் ஊடாக ஏற்படுத்தி இருக்கும் ஆட்சி மாற்றம் போலியானதும் நிலையற்றதுமாகும். தென் இலங்கையில் ஆட்சியாளர்கள் மீது இருந்த வெறுப்புக் காரணமாக ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் போலித் தமிழ் தேசியம் பேசி இதுவரை காலமும் தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் செய்து வந்த போலித் தமிழ்த் தேசியக் கட்சிகளை நிராகரிக்கும் வகையிலான அரசியல் மாற்றமாக இப்போது உணரப்பட்டு வருகிறது - என்றார். (ம-இ)

# தமிழ்த் தேசிய நீக்கத்தை செய்வதற்காக முயற்சிகள்

## தமிழரசின் வேட்பாளர் சயந்தன் சுட்டிக்காட்டு

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள 'மாற்றம்' என்ற புள்ளியில் நின்றுகொண்டு, தமிழ்த் தேசிய நீக்கத்தைச் செய்வதற்குத் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் சட்டத்தரணியுமான சயந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுக்கு இந்தத் தேர்தல் மிக முக்கியமானது. தமிழர்கள் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் சுயநிர்ணய உரிமைக்காக போராடிவரும் ஓர் இனம். ஆனால், தெற்கில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் என்ற ஒற்றைப் போர்வைக்குள் நின்றுகொண்டு எங்களுக்குச் சம உரிமை இருப்பதாகவும் எங்களுக்குப் பிரச்சினைகள் இல்லையென்றும் காண்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால் தான் இந்தத் தேர்தலில் தமிழர்கள் மிகவும் கவனமாக தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலை உள்ளது.

இந்த ஒற்றைப் போர்வைக்குள் மூடப்பட்டுவிட்டால், எங்களின் தனித்துவம், எங்களின் அடையாளம் மற்றும் எங்களின் தாயகம் என அனைத்துமே மறைந்து போய்விடும். தமிழர்களின் வேணவாவாக சுயநிர்ணய உரிமையே இன்று இருக்கின்றது. அந்த வகையில் எங்களுக்கு உண்மையாகக் கிடைக்க வேண்டியது எங்களிடம் இருந்து பிடுங்கப்பட்ட இறைமை. அந்த இறைமைக்காகவும் இனத்தின் இருப்புக்காகவுமே நாம் போராடுகின்றோம். எனவே, தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்த வேண்டியது இன்று காலத்தேவை. அதனை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு மக்களிடம் உண்டு - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகத்தில்

# பொலிஸாரின் அராஜகம் நீதி மறுக்கப்படக்கூடாது

## இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், நவ. 12**

**சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு பதில் பொலிஸ்மா அதிபர் வருகைதந்து சென்ற சில மணிநேரத்தில் இடம்பெற்ற அராஜகத்துக்கு நீதி வழங்கப்படவேண்டும். பொலிஸார் அராஜகத்தில் ஈடுபட்டிருப்பின் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கையை பிரயோகிக்க வேண்டும் - இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பொலிஸாரின் செயற்பாடுகளை காணொலிப் பதிவு செய்து சமூக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தினால் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியும் என சுற்றறிக்கை வெளியிட்டிருந்தார்.

அதற்கமைய குறித்த தாக்குதல் சம்பவத்தை காணொலியாகப் பதிவுசெய்த ஆசிரியர் ஒருவரின் கைபேசியையும் பொலிஸார் பறித்துச் சென்றுள்ளனர். இதுவரை அந்தக் கைபேசி கொடுக்கப்படவுமில்லை. இது சுற்றறிக்கையை மீறும் வன்செயலாகும். இந்தப் பிரச்சினைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் - என்றார். (ச-27)



# புலம்பெயர் தமிழரால் வேப்பமர உற்பத்திகள்

யாழ்ப்பாணம், நவ.12

புலம் பெயர் தமிழரான சுந்தரமூர்த்தி புவனகுமார் தாயகம் திரும்பியுள்ள நிலையில் வேப்பமரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட பெறுமதிசேர் உற்பத்திகள் மற்றும் கள ஆய்வுகள் என்பவை தொடர்பில் எடுத்துரைத்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை கடந்த சனிக்கிழமை நேரில் சந்தித்து தனது உற்பத்திப் பொருள்களின் நன்மைகள் குறித்து விளக்கமளித்தார். அவரின் உற்பத்திகளை பார்வையிட்ட ஆளுநர், அவற்றுக்கு தாயகப் பிரதேசத்திலிருந்து ஆதரவை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ச-25)

கப்பல் பயணிகளுக்காக

# நாகப்பட்டினம் வரை ரயில் சேவை வழங்குக

யாழ்ப்பாணம், நவ. 12

காங்கேசன்துறையிலிருந்து நாகப்பட்டினத்துக்கும், நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கும் பயணம் செய்யும் கப்பல் பயணிகளின் வசதிகருதி மதுரை - புனலூர் (கேரளா) இடையே நடைபெறும் இரவு நேர புகையிரத சேவையை நாகப்பட்டினம் அல்லது காரைக்கால் வரை நீடிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்திலுள்ள போக்குவரத்து சேவை நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

காங்கேசன்துறையிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பயணிகள் நாகப்பட்டினத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்குச் செல்வதற்கு மறுநாள் காலை வரை காத்திருக்கவேண்டியுள்ளது.

மதுரை - புனலூர் புகையிரத சேவை நாகப்பட்டினம் அல்லது காரைக்கால் வரை நீடிக்கப்படும் பட்சத்தில் காங்கேசன்துறையிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பயணிகள் அன்றைய தினமே தமது பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-6)

# கைவிலங்குடன் இரு கைதிகள் தப்பியோட்டம்!

கொழும்பு, நவ. 12

பொலநறுவை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு கைதிகள் ஹிங்குரக்கொட நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது நீதிமன்ற நுழைவாயிலுக்கு அருகில் வைத்து கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ளதாக ஹிங்குரக்கொட பொலிஸார் தெரிவித்தனர். தப்பிச் சென்ற இரு கைதிகளும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கு விசாரணைக்காக ஹிங்குரக்கொட நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)



# மாணவர்களுக்கு சீனாவின் சீருடை

## ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

இலங்கை முழுவதுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீன நாட்டிலிருந்து சீருடைத்துணி வழங்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு சீனா பல வழிகளிலும் உதவுகின்றது. இலங்கை முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடம் 2025 ஆம் ஆண்டு சீருடைத்துணி வழங்குவதற்கான ஏற்பாடுகள் சீனாவால் மு[illegible] என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-27)

# புதினம் தெரியுமோ?

**இண்டைக்கொரு சின்னக்கதை சொல்லிப் போட்டு புதினத்தைப் பார்ப்பம். கிட்டடியில மருதனார் மடச் சந்தைக்கு கிட்ட றோட்டில போன ஒராளை மறிச்சு, பொலிஸ்காரர் வெளுவெளுவெண்டு வெளுத்தவை. அதுகும் பத்தாதெண்டு, ஆள் கஞ்சா வைச்சிருக்கிறார் எண்டு சொல்லி, அவரின்ர மோட்டச்சைக்கிளையும் ஜீப்பில ஏத்திப்போட்டு, காயத்தோட அந்த ஆளை அம்புலன்ஸில ஏத்திக் கொண்டு போனவை. அடிவாங்கின பெடியன், சந்தையில கடை வைச்சிருக்கிற ஒராளோட கொழுவலாம். அந்தக் கொழுவல் கடைக்காரரோட பொலிஸ்காரர் நல்ல 'கொந்தாயாம்'. அதாலதான் ஒரு காரணமும் இல்லாமல் அந்தப் பெடியனை இப்பிடி எல்லாருக்கும் முன்னால போட்டு அடிச்சுப்போட்டு அம்புலன்ஸில ஏத்திக் கொண்டு போனவையாம். கிட்டத்தட்ட ஒரு அரைமணித்தியாலமா இப்பிடி றோட்டில பெடியனை போட்டு அடிக்கேக்க அதால போய்வந்தவையோ, அங்க நிண்டவையோ ஏனெண்டும் போய்க் கேக்கேலை. எல்லாரும் அவரவர் பாடு.**

**இப்ப அதே மருதனார்மடத்துக்கு கொஞ்சம் தள்ளி சுன்னாகத்தில, மோட்டார் சைக்கிளில போன பொலிஸ் தங்கட பாட்டில விழுந்தெழும்பிப் போட்டு, பின்னால வந்த வாகனக்காரர்தான் காரணமெண்டு அவையோட கொழுவல் எடுத்து. குழந்தைப் பிள்ளையையும் பிடுங்கியெறிஞ்சு பெரும் அல்லோலகல்லோலம். ஆனால் இந்தமுறை அதிசயமா அவைக்காக குரல் குடுக்க எங்கையோ இருந்தெல்லாம் வாகனங்களில வெள்ளை வேட்டியளோட ஆக்கள் வந்திட்டினம். அது பத்தாதெண்டு அடுத்தநாள் அறம்புறமா அறிக்கையளும் விட்டினம். மருதனார் மடத்தில நடந்த சம்பவத்தை எட்டியும் பாக்காதவை, அப்பிடி ஒரு சம்பவமே நடந்ததை இதுவரை அறியாமல் இருந்தவை கூட, உந்தச் சுன்னாகச் சம்பவத்துக்கு வேட்டியை மடிச்சுக்கட்டிக்கொண்டு ஏன் வந்தவை? எல்லாமே எலக்சன் படுத்திறபாடுதான்**

**பொலிஸ்காரர் சுன்னாகத்தில இப்பிடி ஆக்களோட தனகுப்பட்ட கதை மேலிடத்துக்கு தெரியவர, உடன விசாரணை நடத்தச் சொல்லி ஓர்டரும் போட்டாச்சு. இப்பிடி விசாரணை நடத்தச் சொன்ன விசயம், 'ரண்டு பொலிஸ்காரரையும் வேலையை விட்டு நிப்பாட்டியாச்சாம்' எண்டமாதிரி பரவியிருக்கு. அதை உண்மையெண்டு நம்பின சில அரசியல்வாதியள் அவசரக்குடுக்கைத்தனமா ' நாங்கள் மேலிடத்துக்கு விசயத்தைச் சொன்னதால தான் அந்த ரண்டு பொலிஸ்காரரையும் வேலையை விட்டு நிப்பாட்டி, பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதி வாங்கிக் குடுத்தம்' எண்டு உரிமை கொண்டாடத் தொடங்கிட்டினம். பாவம், அவைக்கு இதுவரைக்கும் அந்த ரண்டு பொலிஸ்காரரையும் வேலையை விட்டுத் தூக்கேலை எண்டு தெரியாது. எப்பிடியாவது இஞ்ச நடக்கிற நல்லதுக்கெல்லாம் நாங்கள் தான் காரணம் எண்டு பேரெடுத்து வாக்குகளை வாங்கினாச் சரி எண்ட நினைப்பில தான் அவையள் இருக்கினம். ஆனால் அவையை விட சனம் இப்ப கடும் அலேர்ட். எல்லா வண்டவாளமும் நாளையிண்டைக்குத் தெரியத்தானே போகுது.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.12

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக் கள் நடத்தும் வாராந்த திருவாசகச் சொற்பொழிவும், ஈழத்துச் சித்தர்கள் குருபூசையும் தொடர் - 7 பெரியானைக்குட்டி சுவாமிகள் குருபூசைநிகழ்வு தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளதோடு, 'போற்றிப் பணிய வேண்டிய பெரியானைக் குட்டி சுவாமிகள்' எனும் விடயப்பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் செ. த. குமரனின் சொற்பொழிவும், அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ச-45)



# கமலாசனி வித்தியாலயம் நடனப் போட்டியில் சாதனை

யாழ்ப்பாணம், நவ.12

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசிய மட்ட இலங்கை பரத நாட்டியப் போட்டியில் மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் குழு நடனத்தில் முதலிடத்தையும், தனி நடனத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. (ச-45-9)

# சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 31 சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் தலைமையில் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தை தொடர்ந்து, இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் நித்திய பாபுதரன் 'மாணிக்கவாசகரும் கண்டபத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். இதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-45)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டுவிருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**கடகம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய வேண்டியிருக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூல மாக முடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் மகிழ்ச்சியை உண்டாக்கும்.

**கும்பம்:** சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** இன்றைக்கு வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு எதிர் பாராத செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணை வழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

## 01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு பளைநகர பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 12.11.2024 தொடக்கம் 25.11.2024 வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 26.11.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 26.11.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | பளை பொதுச்சந்தை | 2,117,627.00 | 31,764.00 | 2,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 3,317,050.00 | 49,755.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 59,533.87 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கோழியிறைச்சிக்கடை | 446,270.00 | 6,694.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழியிறைச்சிக்கடை | 92,400.00 | 5,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 26.11.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத அறை வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. இறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு,ஆடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தயானந்தன் தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(CR/43692) J-1 12.11.2024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ரணில் மறந்த மன்னிப்பு!

ஜனாதிபதி அநுரகுமாரவும், அவர் தரப்பினரும் தோட்டத் தொழிலாளர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தப்போவதாகத் தெரிவிக்கும் அநுர தரப்பினர், அன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமைகள் வழங்கப் படுவதைக் கடும்போக்குடன் எதிர்த்தனர். எனவே, ஜே.வி.பி. அமைப்பின் அப்போதைய தலைவர் ரோஹண விஜயவீரவின் அன்றைய எதிர்ப்புக்காகவும், அன்றைய நிலைப்பாட்டுக் காகவும்தான் இன்றைய ஜனாதிபதி அநுர மன்னிப்புக்கோரவேண்டும் என்பதே ரணிலின் வாதம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜே.வி.பி. பின்னணியைக் கொண்டவர் என்பதால், ஜனாதி பதி ரணிலின் இந்தக் கோரிக்கை நியாயமானது. அது தவறோ அல்லது அர்த்தப் பிறழ்வோ கொண்ட தல்ல. இன்னும் சொல்லப்போனால் நாகரிக உலகின் வழக்கமும் இதுதான். நூறு வருடங்களுக்கு முன்னர், அதாவது தான் பிறக்காத காலத்தில் கனடாவில் இடம்பெற்ற பழங்குடியினப் படுகொலைகளுக்காகவே தற்போதைய பிரதமர் ட்ரூடோ மன்னிப்புக் கோரியுள்ளார். தான் பிறப்பதற்கு முன்னர் இடம்பெற்ற துட்சி இன மக்களின் படுகொலைகளுக்காகவே பிரான்ஸ் அதிபர் மக்ரோன் வருத்தத்தைத் தெரிவித்திருந்தார். ஆதலால், ஜனாதிபதி அநுர தோட்டத் தொழிலாளர்களிடம் தனது வருத்தத்தைத் தெரிவித்தால், அது ஆகச் சிறந்த முன்மாதிரிகையாக இருக்கும். அதுவொரு நல்ல பண்பும்கூட.

ஜனாதிபதி அநுர தோட்டத் தொழிலாளர்களிடம் மன்னிப்புக் கேட்பதும், கேட்காமல் விடுவதும் ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், தமிழர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க செய்ததை விடவா ரோஹண விஜயவீர தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்துவிட்டார் என்ற கேள்வி இங்கெழுவது தவிர்க்கப்பட முடியாததல்லவா? தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒவ்வொரு தடவையும் ஏதோவொரு நகர்வு மேற்கொள்ளப்படுகின்றபோது அதைத் தீண்டத் தகாத செயலாகக் கருதி, அடியோடு குழப்பியெறிந்து அரசியல் சதிராட்டம் ஆடியதில் இதே ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஆகப்பெரும் வகிபங்கு உள்ளது. அதைத் தமிழர்கள் இன்றல்ல என்றும் மறக்கமாட்டார்கள். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வை வளம்பெற வைப்பேன் என்று ஜனாதிபதி அநுர இன்று புறப்பட்டிருப்பதைப் போன்றுதான், ரணில் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சில மாதங்களில் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவதாக அறிக்கையிட்டார். அதற்குரிய நகர்வுகளையும் மேற்கொண்டார். அப்போதேனும் அவர் தனது கடந்தகாலச் செயற்பாடுகளுக்காக மன்னிப்புக் கோரவில்லையே அது ஏன்? ஜே.வி.பி.அமைப்பைச் சேர்ந்தவர் என்பதற்காக, ரோஹண விஜயவீரவின் தீர்மானத்துக்கும் செயல்களுக்கும் ஜனாதிபதி அநுர மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றால், கடந்த காலங்களில் தான் மேற்கொண்ட தனது சொந்தத் தீர்மானங்கள் மற்றும் சதிராட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் மன்னிப்புக் கேட்கவேண்டியவர்தானே? அந்தப் புரிதலும் தெளிவும் அவருக்கு இன்னும் ஏன் வரவில்லை?




# தேர்தலன்று விடுமுறை; கட்டாயமாக்குங்கள்!

## ஆணைக்குழு வலியுறுத்து

**கொழும்பு, நவ. 12**

**அரச மற்றும் தனியார் துறையின் சேவையாளர்கள் வாக்களிப்பதற்கு போதுமான கால அவகாசம் வழங்கவேண்டும்.**

தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் விடுமுறை வழங்கும் முறைமையை அறிவித்துள்ளோம். தொழில் வழங்குநர்கள் தமது ஊழியர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு கட்டாயம் விடுமுறை வழங்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. பொதுத்தேர்தல் வாக்களிப்புக்கான சகல பணிகளும் பூர்த்தியடைந்துள்ளன. தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் மற்றும் இதர பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் அகற்றப்படவேண்டும். தேர்தலில் வாக்களிக்க இடையூறு விளைவிக்காத வகையில் அனைவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

## மதுபானசாலைகள் இருநாள்கள் பூட்டு

கொழும்பு, நவ. 12

பொதுத்தேர்தல் காரணமாக நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி பொதுத்தேர்தல் காரணமாகவும், 15 ஆம் திகதி பௌர்ணமி தினத்தை முன்னிட்டும் மதுபானசாலைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த தினங்களில் அனுமதிச்சட்டத்தை மீறும் மதுபானசாலைகள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில், சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு மதுவரித்திணைக்கள ஆணையாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளார். (ச-இ)

## இந்திய நீர்மூழ்கி கொழும்பில் தரிப்பு

கொழும்பு, நவ. 12

ஐ.என்.எஸ். வேலா என்ற இந்திய நீர்மூழ்கிக் கப்பல் நேற்றுமுன்தினம் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. 67.5 மீற்றர் நீளமான இந்தக் கப்பலில் 53 மாலுமிகள் பணிபுரிகின்றனர். நாளை புதன்கிழமை வரை இந்தக் கப்பல் தரித்து நிற்கும். தரித்து நிற்கும் காலத்தில் இலங்கைக் கடற்படையினருக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் இந்திய கடற்படையினர் ஈடுபடவுள்ளனர். (ச-25,6)

## சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல்

கொழும்பு, நவ,12

அண்மைய நாள்களாக குழந்தைகளுக்கிடையில் வைரஸ் காய்ச்சல் அதிகரித்துள்ளது. ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஏறக்குறைய மூன்று நாள்களுக்கு காய்ச்சல் நீடித்தால் அது தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். இருமல், சளி, காய்ச்சல், உடல் வலி, வாந்தி இருந்தால் வைரஸ் காய்ச்சலுக்கான அறிகுறியாகும் என்றும் அவர் அறிவுறுத்தினார். (ச)



## அரசியல்வாதிகள் சிறைக்குள் அவதி

சிறையில் அடைக்கப்பட்ட பிரபலங்கள் இம்முறை வழக்கத்தைவிட உயர் சலுகைகளைப் பெறமுடியாமல் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறை அதிகாரிகளிடம் இருந்து சிறப்பு மரியாதை கிடைக்காததால் பிற கைதிகளின் கேலிக்குள்ளாவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. முன்னாள் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வதே, அர்ஜுன் அலோசியஸ், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்டோரே இவ்வாறு அவதிக்குள்ளானதாகக் கூறப்படுகிறது. (ச)

**நாளை**

**13.11.2024**

புதன்கிழமை - ஐப்பசி - 27

சுபநேரம் : 04.37 - 06.07

ராகுகாலம் : 12.07 -01.37

**நாளொரு நல்வார்த்தை**

**"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்"**

- இரவீந்திரநாத் தாகூர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

1. யாழ் நகரின் வர்த்தக மையப்பகுதியான ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக இரண்டு கடைகளும்,
2. யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக தொடர் மூன்று கடைகளும் (50 அடி அகலமும் 200 அடி நீளமும்),
3. யாழ் வர்த்தக மையப்பகுதியான மின்சார நிலைய வீதியில் C.T.B தரிப்பிடத்திற்கு பின்புறத்தில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்,
4. யாழ் மின்சார நிலைய வீதியில் ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக மூன்று பரப்பு, நான்கு பரப்பு, ஐந்து பரப்புக் காணியும்,
5. யாழ் K.K.S வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 20 அடி அகலமும் 140 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடையும்,
6. யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும், 216 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:- 077 723 2535

(CS/1824) J-1

## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2025

2025 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் தரம் வாய்ந்த வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை www.vavuniyanorth.ps.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலமாகவோ, 024-2030200, 024-2053014 எனும் தொலைபேசி இலக்கங்களூடாகவோ அல்லது vnpsnk@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ தொடர்பு கொள்வதன் மூலம் அறிந்துகொள்ளமுடியும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 05.12.2024**

**சோ.மணிவண்ணன்,**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை.**

(cr.43689) (N -1)

## University of Jaffna
## Faculty of Medicine
## Centre for Digital Epidemiology (CoDE)

### Temporary Appointments
### Rural health development project: Bridging the gaps in Primary care through Community Health Workers in Batticaloa District

**Post of Community Health worker**

University of Jaffna, Sri Lanka has embarked on a project for Bridging the gaps in Primary care through Community Health Workers in Batticaloa District, funded by the International Medical Health Organization (IMHO).

**01. Community Health Worker (Female)**
**Vacant – 05 posts**

**Requirements**

- Preference will be given to those who have experience in community-based health-related projects.
- The candidate should be residing in Batticaloa District.

**Remuneration:** A monthly salary of LKR 32,608.00 will be paid.

**General notes to all the above posts**

- All the candidates should annex the character certificate from their respective Grama Niladhari.
- Candidates should possess excellent language skills in Tamil.
- All the selected candidates will be appointed as full-time on a contract basis for One year.
- Should be a citizen of Sri Lanka.
- Age should be not less than 18 years and not more than 35 years.

All the selected candidates will become contributors to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), in which case, the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETF respectively.

Further details on duties and responsibilities can be found on the university website: https://www.jfn.ac.lk.

The Application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

The Application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.** Applicants are requested to send scanned copies of all the documents to the email address: **fomvacancy@univ.jfn.ac.lk on or before 22nd of November 2024.**

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions.

Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The post applied for should be marked on the top left-hand corner of the envelope. Only short-listed applicants will be called for an interview.

**Registrar**

(cr.43687 (N-1)

## University of Jaffna
## Faculty of Medicine
## Centre for Digital Epidemiology (CoDE)

### Post of Research Assistant (Temporary Appointments)

The University of Jaffna invites applications from qualified candidates for the position of Research Assistant at the Centre for Digital Epidemiology, Faculty of Medicine, University of Jaffna.

**Requirements:**

- A Bachelor's degree in Medicine and Surgery (MBBS), Allied Health Sciences, Mathematics, Statistics, Siddha Medicine and Surgery (BSMS), Ayurvedic Medicine and Surgery (BAMS), or Unani Medicine and Surgery (BUMS).
- At least 1 year of experience working in a multidisciplinary research team in areas such as Epidemiology, Research Methodology, Health Systems Research, Data Management, and Statistics.
- Preference will be given to candidates with postgraduate qualifications in relevant areas.
- Proficiency in both qualitative and quantitative research methods.

**Remuneration:** A monthly salary of LKR 80,000 will be paid.

**Other:**

- The selected candidate will be appointed full-time for one year and the appointment is subject to renewal based on performance and needs.
- Candidates must be citizens of Sri Lanka.
- Age should be between 25 and 45 years.
- The selected candidate will contribute to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF). The employee is required to contribute 8% of their monthly salary to the EPF, while the employer will contribute 12% to the EPF and 3% to the ETF.

Further details on duties and responsibilities can be found on the university website: **https://www.jfn.ac.lk.**

The Application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna,** Adiyapatham Road, Kokuvil, Jaffna. Applicants are requested to send scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk **on or before 22nd of November 2024.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions.

Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The post applied for should be marked on the top left-hand corner of the envelope. Only short-listed applicants will be called for an interview.

**Registrar**

(cr.43686) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ட்ரம்பைக் கொல்வதற்கு ஈரான் முனையவில்லை

டொனால்ட் ட்ரம்பைக் கொல்வதற்கு ஈரான் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று ஈரானின் வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளார். (ம)


## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)
### சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை ஒரு வருடத்திற்கு (01.01.2025 - 31.12.2025) நடத்துவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் 12.11.2024 தொடக்கம் வழங்கப்படும் அதனை பூரணப்படுத்தி 21.11.2024ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.
கேள்விப்பத்திரங்கள் 22.11.2024ஆம் திகதி பி.ப 12.30 திறக்கப்படும் மேலதிக விபரங்களை பாடசாலை நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**தலைவர் , பாடசாலை அபிவிருத்திக் குழு**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**மானிப்பாய்**

## University of Jaffna
## Faculty of Medicine
## Centre for Digital Epidemiology (CoDE)
## Temporary Appointments

**DIGIPATHS Study: Digitally Integrated Care Pathways for Multiple-Long-Term Conditions Management in Primary Care, Sri Lanka**

The University of Jaffna invites applications from qualified candidates for the following position of DIGIPATHS Study: Digitally Integrated Care Pathways for Multiple-Long-Term Conditions Management in Primary Care, Sri Lanka in collaboration with the University of Birmingham funded by the National Institute for Health and Care Research (NIHR), UK.

1. **Research Fellow (Implementation Science)**

**Requirements:**

- A Bachelor's degree in Science, Allied Health Sciences, or a relevant field from a UGC-approved university or higher education institution (HEI).
- Preference will be given to candidates with postgraduate qualifications in relevant areas such as Epidemiology, Research Methodology, Health Systems, Healthcare Management or equivalent qualifications.
- At least 1 year of experience working in a multidisciplinary team within the medical or research field.
- Demonstrated experience in conducting implementation research, preferably in primary care or digital health.
- Proficiency in both qualitative and quantitative research methods.

**Remuneration:** A monthly salary of LKR 80,000 will be paid.

2. **Research Fellow (Health Informatics)**

**Requirements:**

- A Bachelor's degree in Science, Allied Health Sciences, or a relevant field from a UGC-approved university or higher education institution (HEI).
- Preference will be given to candidates with postgraduate qualifications in relevant areas such as Epidemiology, Research Methodology, Health Systems, Healthcare Management or equivalent qualifications.
- At least 1 year of experience working in a multidisciplinary team within the medical or research field.
- Demonstrated experience in conducting implementation research, preferably in primary care or digital health.
- Proficiency in both qualitative and quantitative research methods.

**Remuneration:** A monthly salary of LKR 80,000 will be paid.

3. **Project Manager**

**Requirements:**

- A Bachelor's degree or other equal qualification from UGC-approved University or Higher Education Institution.
- Minimum 03 years post qualifying experience in health-related project management in public service/ corporation/ statutory board or a reputed institution.

**Remuneration:** A monthly salary of LKR 80,000 will be paid.

**Other:**

- Ability to work in any part of Sri Lanka.
- The selected candidate will be appointed full-time for one year. The project duration is five years, and the appointment is subject to renewal based on performance and project needs.
- Candidates must be citizens of Sri Lanka.
- Age should be between 25 and 45 years.
- The selected candidate will contribute to the Employee Provident Fund (EPF) and the Em ployee Trust Fund (ETF). The employee is required to contribute 8% of their monthly salary to the EPF, while the employer will contribute 12% to the EPF and 3% to the ETF.

Further details on duties and responsibilities can be found on the university website: https://www.-jfn.ac.lk.

The application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna. Applicants are requested to send scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before 22nd of November 2024.


Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions.

The candidates who apply for more than one post should submit a separate application along with a separate Bank slip for each of the posts. Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The post applied for should be marked on the top left-hand corner of the envelope. Only short-listed applicants will be called for an interview.

**Registrar**

(CR/43686) J-1


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில்** 02.03.1976 — **விண்ணில்** 25.10.2023

### அமரர் வல்லிபுரம் ஜெகதீஸ்வரன்

(நெடுங்கேணி பிரதேச செயலக முன்னாள்
அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**திதி: வளர்பிறை ஏகாதசி (12.11.2024)**

ஆண்டு ஒன்று ஆனது மாநிலத்தில் நீ பிரிந்து
தீராத துயரத்தில் தேம்புகின்றோம் நாம் இங்கு
உறவுகளை தவிக்கவிட்டு இமைகளை மூடிவிட்டாய்
எமையெல்லாம் அழவிட்டு இறைவனை நாடிவிட்டாய்
உனை எண்ணி தினம் தினம் மனம் வெதும்புகின்றோம்
நீ மறைந்த நாள் முதலாய் நிம்மதி எமக்கில்லை
நினைவிழந்து செயலிழந்து நிர்க்கதியாய் நிற்கின்றோம்.
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**அப்பா**
**சகோதரர்கள்**
**077 071 1790**

(CS/1821) J-1

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 05 . 06 . 1939



**மறைவு** 10 . 11 . 2024

### தாமோதரம்பிள்ளை இரத்தினசிங்கம்

(இளைப்பாறிய டிப்போ மேற்பார்வையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இரத்தினசிங்கம் நேற்றுமுன்தினம் (10.11.2024) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், ரஜனி, ரஞ்சனி, ராஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விவேகானந்தன், ஜெகநாதன், மணிவண்ணன், ஆகியோரின் மாமனாரும் அனுஷ்ரிகா - மிலன், சத்வினு, தனுஸ்டிஹறன், தனுஷ்கா, விமோஜனு, மதுஜன், மிவிஷா, ரகிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், மிஷ்வினின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கச்சாய் எரியாப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வெள்ளாம் போக்கட்டி**
**கொடிகாமம்.**

(cs.56652) N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்கட்சி மோதலாலே தமிழரசு பலவீனம்

## வேட்பாளர் இளங்கோவன் ஆதங்கம்



யாழ்ப்பாணம், நவ.12
தமிழரசுக் கட்சியின் உட்கட்சி மோதல் காரணமாகவே தமிழ் மக்கள் மத்தி யில் நாம் பல வீனப்பட்டுள்ளோம். இது கவலைக்குரிய விடயம் என அந்தக் கட்சியின் நாடாளு மன்ற தேர்தல் வேட்பாளர் இளங்கோவன் தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சியில் தனியார் விருந்தகம் ஒன்றில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில், "தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஒருவர் ஏனைய கட்சிகளின் வேட்பாளர் களை விமர்சிப்பதனை விட தன்னு டைய கட்சி வேட்பா ளர்கள் மீது கடும் விமர்சனத்தையும், குற்றச்சாட்டுகளை யும் முன்வைத்து வருகின்றார்?" என ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் கூறுகையில்,
இது ஒரு மிக மோசமான நிலைமை. தமிழரசுக் கட்சி உட்கட்சி மோதல்களால் பலவீனப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்களும் நம்பிக்கையற்றுள்ளனர். இந்த நிலைமை நிவர்த்தி செய்யப்படவேண்டும். நீர்காலத்தில் தமிழரசுக் கட்சியை ஒற்றுமையாக ஒரு தலைமையின் கீழ் கொண்டு செல்வதற்கு முயற்சிகளை மேற்கொள் வேன் - என்றார். (ச-214)

# உரிமைக்கான பயணத்தில் ஓரணியாகத் திரள்வோம்

## வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ,12
**தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தை நேர்த்தியாக முன்னெடுப்பதற்கு பலமானவர் களை ஒன்றிணைத்துக் களமிறங்கியுள்ள ஜனநா யகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கே வாக்குகளை மக்கள் அளிக்கவேண்டும்.**

- இவ்வாறு சாவகச்சேரியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்ட ணியில் போட்டியிடும் வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஓர் இனத்தின் தேசியம் காக்கப்பட வேண்டியது தார்மீக பொறுப்பு. எனவே எமது இனத்தின் இருப் பைக் காப்பதற்கு ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் உரி மைக்கான பயணத்தை நேர்த்தி யாக முன்னெடுக்க வேண்டும். எனவே மக்கள் சிந்தித்து கட்டுக் கதைகளையும் போலி வார்த் தைகளையும் நம்பி இம்முறை ஏமாறாது பலமான கட்சியான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத் துக்கே எமது மக்கள் வாக்களிக்க வேண்டும். எனது கணவரின் வழியில் எனது பயணம் தொடர ஆணை அளிக்கவேண்டும்- என்றார். (ச-26)

# அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்

## சிறீதரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.12
தேர்தல் வெற்றிக்காக மிகக் கீழ்த்தரமான செயல்களை முன்னெடுக்கும் அரசியல் பிழைத்தோர்க்கு, காலமும் இயற்கை யும் அறத்தின்பாற்பட்ட விளைவு களை மீளளிக்கும்போது, அத்த கையவர்கள் மக்கள் மனங்களி லிருந்தும், அரசியல் அரங்கிலிருந்தும் அடியோடு புறக்கணிக்கப்படுவார்கள் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி - பாரதிபுரத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தத்தமது தனிமனித நலன்களை முன்னிறுத்தியும், தனிப் பட்ட வெற்றி ஒன்றே நோக்கமெனவும் தேர்தல் அரசி யலை முன்னெடுக்கும் சிலர், தனிமனிதர்கள் மீதான சேறுபூசல்களையும், அவதூறு பரப்பலையுமே தமது இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறார்கள். அறம் சார் அரசியலை முன்னெடுப்பவர் களால் மட்டுமே மக்கள் மத்தியில் நிலைபெற முடியும் - என்றார். (ச)

# துரோகமிழைத்தோரை தூக்கிவீசுங்கள்

## சிறீரங்கேஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.12
தமது சுயநல தேவைக்காக அரசுக்கு ஆதரவு கொடுத்த தமிழ்த் தலைமைகள் மக்களின் நலன் களையோ அவர்களது எதிர்காலம் தொடர்பிலோ சிறிதளவும் சிந்திக்கவில்லை. இத்தகைய போலித் தேசியவாதிகளின் வேசங்களுக்கு மக்கள் இம் முறை செவிசாய்க்கக்கூடாது.
-இவ்வாறு வடமராட்சி கிழக்கு கேவில் பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஈழ மக் கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரும் கட்சியின் ஊடகப்பேச்சாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வ ரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமக் கான கையூட்டல்களை கோடிகளில் பெற்று மக்க ளுக்குத் துரோகமிழைத்துள்ளனர். இதன் விளை வாக வடக்கில் மக்களின் விவசாய நிலங்கள், குடி யிருப்பு நிலங்கள், மேய்ச்சல் தரைகள் என அனைத் தும் அதிகாரத்தின் கரங்கள் விழுங்கியுள்ளன.
எனவே போலித் தேசியவாதிகளின் வேசங்களுக்கு அடிபணியாது நடைமுறைச் சாத்தியமான எமது கொள்கையைப் பின்பற்றி மக்கள் எம்முடன் அணி திரளவேண்டும்- என்றார். (ச-25)


# வெற்றியைக் குழப்பவே திட்டமிட்டு அவதூறு

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.12
நாடாளுமன்றத் தேர்தலில் எனக்குக் கிடைக்க இருக்கின்ற வெற்றியைப் பாதிக்கக்கூடிய வகையில் பொய்யானதும் உண்மைக்கு மாறா னதுமான கூற்றுகள் திட்டமிட்டுப் பரப்பப்படு கின்றன. இதற்கு எதிராக நட்டஈடு கோரி நீதி மன்றத்தை நாடவுள்ளேன்.
- இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
அவர் விடுத்த விசேட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:
என் மீது மக்கள் கொண்டுள்ள நன்மதிப்புக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில் பொய் யான விடயங்களை அல்லது சேறுபூசல்களை திட்டமிட்ட வகையில் ஊடகங்கள் வாயிலாக பரப்புகின்றனர். நாடாளுமன்றத் தேர்தலில் எனக்குக் கிடைக்க இருக்கின்ற வெற்றியை சீர்குலைக்கும் வகையில் உண்மைக்கு மாறா னதாக அந்தக் கூற்றுகள் அமைந்துள்ளன.
இந்தப் பொய்யான கூற்றுகளுக்கெதிராக நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதற்காக நீதிமன் றத்தை நாட இருக்கின்றேன்- என்றார். (ச-27)

# ஏமாற்று வித்தையில் அநுர அரசாங்கம்

## சித்தார்த்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.12
பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கப்பட வேண்டும் எனக் கூறி ஆட்சிபீடமேறிய அநுர அரசாங்கம் தற் போது அதை திருத்தி பயன்படுத்தலாம் எனச் சொல்கின் றனர். இதனையுணர்ந்து மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.
இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித் தார். மாற்றத்தை பற்றி பலர் சொல்கின்றனர். மாக்ஸிச லெனினிச கொள்கைளை பேசும் ஒருவர் ஆட்சியில் ஏறியமை மாற்றம் தான். ஆனால் தமிழ் மக்களுக்குரு ஒரு பிரச்சினை இருக்கிறது. அதிகார பரவலாக்கம் தேவை என்ற விடயங்களை அநுர தரப்பு ஏற்பதாக தெரியவில்லை.
தமிழ் மக்கள் இம்முறை சிந்தித்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20)

# தேர்தல் காலத்தில் இடரை எதிர்கொள்ள விசேட நிலையம்

கொழும்பு, நவ. 12
இன்று செவ்வாய்க்கிழமை முதல் 5 நாள்க ளுக்கு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத் தில் விசேட பிரிவொன்று அமைக்கப்படவுள் ளதாக நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். தேர்தல் காலத் தில் ஏதாவது இடர்கள் தோன்றுமாயின் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக இந்தப் பிரிவு இயங்கவுள்ளது. (ச-25, சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
# 2025 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள். இறைச்சிக் கடைகள். சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை. கருவாட்டுக்கடைகள் மற்றும் தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் என்பவற்றினை 2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 12.11.2024 தொடக்கம் 25.11.2024 , 2.30 மணி வரை (கடமை நாட்களில்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 26.11.2024 முற்பகல் 10 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 26.11.2024 முற்பகல் 10.30.

1. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.** என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 26.11.2024 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 26.11.2024 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட பிரதேச செயலாளரால் மேலொப்பமிட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும். கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
5. எம்மால நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள். ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல் களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள். ஆடுகள் அறுக்கப்பட வேண்டும்.
6. எமது சபையின் சந்தைகள். இறைச்சிக்கடைகளிலிருந்து 1.5KM தூரத்திற்குட்பட்ட கடைகளில் அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறிகள். இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
7. ஒவ்வொரு கேள்விப்பத்திர வகைகளுக்கும் அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும்.
8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகை. வாடகையின் 1/3 பகுதியையும் (உரிய வரிகளுடன்) பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
9. சந்தைகள். இறைச்சிக் கடைகள். சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை. கருவாட்டுக்கடைகள் மற்றும் தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் என்பவற்றிற்கு விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு சபையின் கடை நடாத்தியவராயின் எதுவித நிலுவையும் இல்லை என்பதனை உப அலுவலக பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தும்.
11. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பெயர் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | **முல்லைத்தீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,000.00 | 37,000.00 | - | **1,213,500.00** |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 64,000.00 | 5,000.00 | **2,100,000.00** |
| 3 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 44,000.00 | 5,000.00 | **1,451,005.00** |
| 4 | முல்லைத்தீவு கருவாட்டுக்கடை | 2,000.00 | 3,000.00 | 5,000.00 | **90,100.00** |
| 5 | முல்லைத்தீவு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 16,000.00 | 4,500.00 | **528,000.00** |
| | **முள்ளியவளை உப அலுவலகம்** | | | | |
| 6 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 2,000.00 | 103,000.00 | - | **3,401,000.00** |
| 7 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | 1,500.00 | - | **42,000.00** |
| 8 | கேப்பாப்பிலவு பொதுச்சந்தை | 2,000.00 | 200.00 | - | **5,000.00** |
| 9 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 37,000.00 | 3,150.00 | **1,200,000.00** |
| 10 | முள்ளியவளை கோழிஇறைச்சிக்கடை | 2,000.00 | 22,000.00 | 3,150.00 | **719,000.00** |
| 11 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 82,000.00 | 2,700.00 | **2,711,100.00** |
| 12 | தண்ணீரூற்று கோழிஇறைச்சிக்கடை | 2,000.00 | 71,000.00 | 2,700.00 | **2,361,100.00** |
| 13 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 2,000.00 | 1,000.00 | 2,700.00 | **25,501.00** |
| 14 | வற்றாப்பளை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 2,500.00 | 1,750.00 | **80,000.00** |
| 15 | தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் | 2,000.00 | 1,500.00 | - | **36,000.00** |
| | **கொக்கிளாய் உப அலுவலகம்** | | | | |
| 16 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 2,000.00 | 200.00 | - | **3,000.00** |
| 17 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 16,000.00 | 1,000.00 | **525,900.00** |
| 18 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 20,000.00 | 1,000.00 | **630,000.00** |
| | **முள்ளிவாய்க்கால் உப அலுவலகம்** | | | | |
| 19 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 2,000.00 | 200.00 | - | **2,835.00** |
| 20 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 200.00 | 1,000.00 | **4,000.00** |
| 21 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 3,500.00 | 1,000.00 | **103,500.00** |
| 22 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,500.00 | - | **40,959.00** |
| | **கொக்கிளாய் உப அலுவலகம்** | | | | |
| 23 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | - | **11,000.00** |
| 24 | குமுழமுனை பொதுச்சந்தை | 2,000.00 | 6,500.00 | - | **210,000.00** |
| 25 | செம்மலை பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | - | **23,500.00** |
| 26 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 12,000.00 | 2,000.00 | **393,057.00** |
| 27 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 38,000.00 | 1,750.00 | **124,457.00** |
| 28 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 500.00 | 1,000.00 | **9,000.00** |

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்றுபிரதேசசபை, முல்லைத்தீவு.**
12.11.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ct.43688) (N-1)

## தமிழ்த் தேசியப்...

இனப்பிரச்சினையை கொஞ்சமும் கணக்கிலெடுக்கவில்லை. இதுதான் உண்மை என்று தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் தெரிவித்துள்ளார். தமிழரசுக் கட்சியின் இறுதிக் கட்டத் தேர்தல் பரப்புரை நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தனக்கு ஆதரவுகோரி ஜனாதிபதி எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தபோது, தெற்கில் மாற்றம் வரவுள்ளது. இரண்டரை வருடங்களாக மக்கள் இந்த மாற்றத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அதில் நீங்கள் பங்காளிகளாக இருக்கப்போவதில்லையா? என்று எம்மிடம் வினவியிருந்தார். அதற்கு தெற்கில் வரவுள்ள மாற்றங்கள் நல்லவை என்றும், கேடான அரசியல் கலாசாரம், ஊழல் மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கை என அனைத்துக்கும் எதிராக நாம் இணைந்து செயற்படுவோம் என்று அவரிடம் தெரிவித்திருந்தேன்.

ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணத்தில் பரப்புரைக்காக வருகின்றார் என்ற போது, நான் அவரிடம் இரண்டரை வருடங்களாக தெற்கில் இருந்த மாற்றத்துக்கான காத்திருப்பில் பங்காளியாக வேண்டும் என்று எம்மிடம் கோரியிருந்தீர்கள். ஆனால், எழுபத்தைந்து ஆண்டுகளாக எங்கள் மக்கள் மாற்றத்துக்காக ஏங்குகின்றனர். இந்த மாற்றத்துக்கான ஏக்கத்தில் நீங்கள் பங்காளியாக இருப்பீர்களா? இல்லையா? இதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவரிடம் தெரிவித்திருந்தேன். ஆனால் அதுபற்றி ஜனாதிபதி மூச்சுக் கூட விடவில்லை. சமஷ்டி தொடர்பில் கதைப்பதற்கே அவர் தயாரில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டமாக இருக்கலாம், பார் பெர்மிட்கள் வழங்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்துவதாக இருக்கலாம், ஆட்சிப்பீடம் ஏறிய வெறும் ஒரு மாத்துக்குள் தேசிய மக்கள் சக்தி சொல்வது ஒன்றாகவும் செய்வது வேறொன்றாகவுமே உள்ளது. இது ஆபத்தானது.

நான் தேசிய மக்கள் சக்தியினர் தொடர்பில் இவ்வளவு நேரம் எதற்காகக் கதைக்கின்றேன் என்று உங்களில் பலர் கேட்கலாம். ஏனெனில், யாழ்ப்பாணம் மக்களுக்கு ஒரு கெட்ட பழக்கம் இருக்கின்றது. மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகின்றதோ அந்தக் கட்சியைச் சேர்ந்தவருக்கு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையேனும் வழங்கிவிடுவார்கள். அது தியாகராஜா மகேஸ்வரனாக இருக்கலாம், விஜயகலா மகேஸ்வரனாக இருக்கலாம், அங்கஜன் இராமநாதனாக இருக்கலாம், அல்லது எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சராக இருக்கின்ற டக்ளஸாக இருக்கலாம். இது மிகக் கெட்டபழக்கம். சிந்திக்காத நடவடிக்கை. இதுமாறவேண்டும் - என்றார். (அ-ம)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.12

யாழ். நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணத் தொடர் சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத் தின் தலைமையில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினைத் தொடர்ந்து பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையினையும், இளஞ்சைவப்புலவர், பிரசங்க வாரிதி ச. நவநீதன் 'பார்ப்பதிப் படலம்' எனும் விடயப்பொரு ளில் சொற்பொழிவையும் ஆற்றவுள்ளனர். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-45)



# யாழ். இந்துக் கல்லூரி சாதனை

யாழ்ப்பாணம், நவ.12

மட்டக்களப்பில் அண்மையில் நடத்தப்பட்ட இலங்கைப் பாடசாலைக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசியமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட டி பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பெற்றது. (ச-45-66)

## 15 ஆம்...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 15ஆம் திகதிவரை மழைக்குச் சாத்தியமுள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்காள விரிகுடாவில் காணப்படும் இரண்டு காற்றுச் சுழற்சிகளும் இன்று (நேற்று) இரவு ஒருங்கிணையும் வாய்ப்புள்ளது. இரண்டும் ஒருங்கிணைந்தால் இது ஒரு காற்றழுத்தத் தாழ்வு நிலையாக வலுப்பெறும். அத்துடன் இது மேற்கு வடமேற்குத் திசைநோக்கி வடக்கு மாகாணத்துக்கு அருகாக நகரும் வாய்ப்புள்ளது. இதனால், எதிர்வரும் 15ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என இந்த மழை இடிமின்னலுடன் இணைந்த மழையாக இருக்கும். எனவே, இடிமின்னல் தொடர்பில் மிகவும் அவதானமாகவிருப்பது அவசியம். அத்துடன் இன்று (நேற்று) முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது - என்றார். (ம-66)

## மக்களால்...

யார் என்பதைக் காட்டுவார்கள் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கஜன் மேலும் தெரிவித்ததாவது:-

2020ஆம் ஆண்டில் எல்லோரும் என்ன சொன்னார்கள்? 'வெற்றியாளர் என்ற கணக்கில் எம்மை சேர்ப்பதில்லை. அங்கஜனுக்கு ஆசனம் இல்லை' என்றனர். ஆனால் எங்கள் ஆட்கள் சத்தமில்லாமல் வேலை செய்தார்கள். ஒரு சிலர் சில மாதங்களாக வேலை செய்கின்றனர். ஒரு சிலர் இரண்டு மாதங்களாக வேலை செய்கின்றனர். நான் நான்கு வருடங்களாக ஓடிக்கொண்டே இருக்கிறேன். அது இன்னும் முடியவில்லை. நான் மீண்டும் வந்துள்ளேன். இன்னும் வேகமாக ஓடுவதற்கான ஆணையைக் கோரவே இங்கு வந்துள்ளேன்.

போலிச் செய்திகளை வைத்து அரசியலில் எம்மை அகற்ற நினைத்தனர். 4 வருடத்தில் என்ன செய்தாய்? எனக் கேட்டார்கள். நான் என்ன செய்தேன் என்ற கணக்கறிக்கையை முழு விபரமாக முதல் பரப்புரைக் கூட்டம் தொடக்கம் வெளிப்படுத்தியிருக்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த வேறு யாராவது கணக்கறிக்கையைக் காட்டியிருக்கிறார்களா? செய்தால்தானே காட்ட முடியும்? சாகும் வரை ஒருவரை நாடாளுமன்றில் வைத்து அழகு பார்த்தோம். ஆனால் அதனால் மக்களுக்கு என்ன நடந்தது? ஒன்பது ஏழாகி இன்று ஆறாகி விட்டது. மக்கள் மறுபடியும் மறுபடியும் ஏமாறுவார்கள் என்று நினைத்தே பலரும் வாக்குக் கேட்கின்றனர். அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து விட்டு உரிமை மற்றும் தமிழ்த் தேசியத்தை பற்றிப் பேசலாம் என மக்கள் இப்போது சொல்கின்றார்கள்.

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்ற அடிப்படையில் நான் அன்றிலிருந்து செயற்படுகிறேன் - என்றார். (அ-ம-20-26)


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 08. பிறவுன் வீதி. ஆதன இலக்கங்கள் 118/4, 118/5, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் V. பரமநாதன் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை கிழக்கு. பிறவுன் வீதி இலக்கம் 118/4, ஐ சேர்ந்த வீரசிங்கம் பரமநாதன் அவர்கள் 12.11.1984ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாலவில் 179ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் அவரது மகளான வீரசிங்கம் தேவமலருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை கிழக்கு பிறவுன் வீதி இலக்கம் 118/4, ஐ சேர்ந்த வீரசிங்கம் மகள் தேவமலர் அவர்கள் 27.01.1987ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 317ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட கைதுறத்தல் உறுதி மூலம் தனக்குச் சொந்தமான பொதுப்பாதை பாவிப்பு உரித்தை கையுதிர்த்து S.வீரசிங்கம் மகள் புவனேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை கிழக்கு. பிறவுன் வீதி இலக்கம் 118/4. ஐ சேர்ந்த வீரசிங்கம் மகள் புவனேஸ்வரி அவர்கள் 27.01.1987ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 318ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் வீரசிங்கம் மகள் தேவமலருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை கிழக்கு. பிறவுன் வீதி இலக்கம் 118/4. ஐ சேர்ந்த (தற்போது வெளிநாட்டில் வசித்துவரும்) இராசேந்திரமும் பெண் புவனேஸ்வரியும் இராஜசிங்கம் சிவதாஸீம் பெண் தேவமலரும் ஆகிய அவர்கள் 21.04.2004ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 4333ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் வீரசிங்கம் கேதாரநாதனுக்கும் பெண் தவமலருக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம் :**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை "முதியனோடையும் மட்டக்களனியும்"

| | |
|---|---|
| 2ம். பேருக்குரிய<br>4ம் பேருக்கு | நில.பர.1 குளி 1.6ம் வீடும் கிணறும் (இதன் பதிவு டி 520/180) இதில் நன்கொடை கொடுத்த குளி 2.92 (இதன் பதிவு டி 546/186) நீக்கி மிகுதி குளி 16.68 2ம் பேருக்குரியது. |

**மேற்படி இறை**

| | |
|---|---|
| | "முதியனோடையும் மட்டக்களனியும்" |
| 4ம் பேருக்கரிய<br>2ம் பேருக்கு | குளி 17 உம் வீடும் கிணறும் (இதன் பதிவு டி 520/179) இதில் கைதுறத்தல் செய்த குளி 3.7 (இதன் பதிவு டி 545/170) நீக்கி மிகுதி குளி 13.3 4ம் பேருக்குரியது. |

**இருவகையாலும்**

| | |
|---|---|
| 2ம் பேருக்குரிய | குளி 16.68 -3.7 சேர்ந்து நில.பர. 1 குளி 1.38 உம் |
| 4ம் பேருக்குரிய | குளி 13.3 - 2.92 சேர்ந்து குளி 16.22 உம் முழுவதும் ஒரே துண்டாக இருக்கும் நிலப்பரப்பு. 1 குளி 17.60 உம். வீடும் கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். |

**இந்த நிலப்பரப்பு 1. குளி 17.60 க்கும் எல்லை.**

| | |
|---|---|
| **கிழக்கு** : | தங்கவேலு சத்திய தேவனின் ஆதனம். |
| **வடக்கு** : | எஸ். என். கே. சுந்தரத்தின் ஆதனம். |
| **மேற்கு** : | கந்தையா திருலோக நாதனின் ஆதனம். |
| **தெற்கு** : | பாதையும் தங்கவேலு சத்திய தேவனின் ஆதனம். |

இதடங்கலும் இன்னும் தெற்கேயிருக்கும் கிழக்கு மேற்காகச் செல்லும் 16 அடி அகல தனியார் பொது ஒழுங்கையினூடக பிறவுன் றோட்டுக்குப் போக்குவரத்துச் செய்யும் உரித்தும்.

ஆதனவரி மதிப்பீட்டு எண் 118/4, 118/5 பிறவுன் வீதி. யாழ்ப்பாணம்.


தற்போது வீரசிங்கம் கேதாரநாதனும் பெண் தவமலரும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வீரசிங்கம் கேதாரநாதனும் பெண் தவமலரும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்.**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(cr.43629) (N-1)


# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 05 . 1940



மறைவு 11 . 11 . 2024

## செல்லப்பா திருநாவுக்கரசு

**(பைனல் ரேனிங் வேக்,**
**றூபி போட்டோ முகாமையாளர், யாழ்ப்பாணம்)**

கல்வளை வீதி. சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா திருநாவுக்கரசு நேற்று (11.11.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - சின்னாச்சி தம்பதியரின் ஏக புத்திரனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், தீபன் (ஆசிரியர்- வேம்படி மகளிர் கல்லூரி), றூபி (சங்கானை சிவப்பிரகாசா ஆரம்ப பாடசாலை), றூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவளமலர் (யாழ். ஊரெழு கணேசா வித்தியாலயம்), றமேஸ் (பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க பாடசாலை), லேறாஜி (சண்டிலிப்பாய், காரைநகர் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லிதன், அஸ்வினி, ஆருஸ், ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்...

வலி.மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழு 14 இன் பரப்புரைக் கூட்டம் நேற்றுமாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுன்னாகத்தில் இடம்பெற்ற விபத்தைத் தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் அராஜகங்கள் தொடர்பில் விசாரணை நடத்த குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படுதல் என்பது தமிழர்கள் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன சொற்றொடர்கள். இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த ரணில் அரசாங்கம் எதற்கெடுத்தாலும் 'விசாரணைக் குழு அமைக்கப்படும்' என்றே கூறிவந்தது. காலத்தைக் கடத்தி, தொடர்புடைய விடயத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக இவ்வாறான நடவடிக்கைகள் அவர்களுக்குத் தேவைப்பட்டன. தற்போது அநுரவும் அதேபோக்கில்தான் பயணப்படுகின்றார்.

அநுரவின் தேர்தல் பரப்புரைக்காக அழைக்கப்பட்டிருந்த மத குருக்களில், பௌத்த பிக்குவின் காலில் மட்டுமே வீழ்ந்து வணங்கியுள்ளார். ஏனைய மதத்தலைவர்களுக்கு அதேபோன்றதொரு முக்கியத்துவத்தை அவர் வழங்கவில்லை. எனவே, அநுர கூறிக்கொள்ளும் மாற்றம் தமிழர்களுக்கானது அல்ல என்பதை அவர் தனது ஒவ்வொரு செயலிலும் காண்பிக்கின்றார். ஜனாதிபதி அநுர 'தமிழர்களின் திசைகாட்டி' அல்ல என்பது மட்டும் உண்மை.

அநுர தரப்பினருக்குத் தீனிபோடும் வகையில்தான் தமிழ்த் தேசியப் பிரதிநிதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிலர் நடந்துகொள்கின்றனர். அறிவுப்பூர்வமாக அரசியலை அணுகுவதாகக் கூறிக்கொண்டு தமிழ்த் தேசிய நீக்கத்தை அவர்கள் தெளிவாகச் செய்துகொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் இதன் ஆபத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழரசுக் கட்சியில் இருந்து நான் பிரிந்து வந்ததன் பின்னணியும் இதுவே. தமிழ்த்தேசியத்தை நெஞ்சில் நிறுத்தி, அதன் இருப்பை உறுதிப்படுத்துவதில் கடந்த 40 வருடங்களாக அர்ப்பணிப்புடன் உள்ளவன் என்ற ரீதியில் இதைக்கூறுவதற்கு எனக்குத் தார்மீக உரிமை இருக்கவே செய்கின்றது. தமிழ்த் தேசிய நீக்க அரசியல் என்ற ஆபத்து நம்மை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. அந்தச் சதியில் இருந்து தமிழ் மக்களையும், தேசியத்தலைவர் எமது அரசியல் குறியீடாக அடையாளம் காட்டிச் சென்ற தமிழரசுக் கட்சியையும் மீட்க வேண்டிய பொறுப்பு எனக்குண்டு.

நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும், ஓர் ஊடகப் போராளியாகவும் தமிழ்த் தேசியத்துக்காக நான் கொண்டுள்ள அர்ப்பணிப்பை ஒவ்வொருவரும் அறிவார்கள். என் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காகவோ, குடும்பப் பிரச்சினைக்காகவோ உதயன் தாக்கப்படவில்லை. என் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக உதயன் பணியாளர்கள் கொல்லப்படவில்லை. தமிழர்களின் குரலாக இருக்கின்றேன். அவர்களின் பிரச்சினைக்காக ஒலிக்கின்றேன் என்பதால்தான் உதயன் ஊடக நிறுவனத்தின் மீது அத்தனை தாக்குதல்களும் இடம்பெற்றன. அத்தனை படுகொலைகளும் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் இருந்து தப்பிச்சென்று ஏதேனும் வெளிநாடுகளில் நான் நிம்மதியாக இருந்திருக்கலாம். ஆனால் நான் இந்த மண்ணில் எந்தன் மக்களுக்காக நின்றேன். உங்களில் ஒருவனாகவே இருந்தேன். உங்களுக்கான ஒருவனாகவும் இருக்கின்றேன். இனியும் அவ்வாறே இருப்பேன். ஆதலால், என் குரலையும், என் வலிமையையும், உங்களுக்கான என் ஓர்மத்தையும் மேலும் பலப்படுத்தவே இம்முறை மாம்பழச் சின்னத்தில் சுயேச்சைக் குழுவாக மக்களாணையைக் கோருகின்றேன். அது கிடைக்கும் என்று உறுதியுடன் நம்புகின்றேன் - என்றார். (அ-ம)

## லஞ்சம்,...

டுவதற்கு தேசிய மக்கள் சக்தியால் மட்டுமே முடியும் என்று அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சந்திரசேகரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் மாற்றம் வேண்டுமென்று மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியால்தான் அந்த மாற்றங்கள் சாத்தியப்படும் என்று மக்களுக்குத் தெரியும். தேசிய மக்கள் சக்தியே மக்களுக்கான சக்தி. எனவே இம்முறை மக்கள் எமக்கு ஆணையிடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

நாட்டில் லஞ்சம், ஊழலை ஒழித்து, மோசடிக் கலாசாரத்தை பிடுங்கியெறிந்து வளமான எதிர்காலத்தை உருவாக்குவதே தேசிய மக்கள் சக்தியின் கொள்கை. அதைநோக்கிநாம் பயணப்படுவோம். வடபகுதி மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். அதை அவர் செய்வார் என்று மக்களுக்கும் தெரியும். அரசியல் கைதிகளின் விடுதலை, காணிவிடுவிப்பு உள்ளிட்ட விடயங்களில் நாம் கவனம் செலுத்துவோம் - என்றார். (அ-ம-26)

## ஜே.வி.பி.யின்...

தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இம்முறை பெருவெற்றியை வழங்குவதற்கு மக்கள் காத்திருக்கின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வெற்றியும் எழுச்சியும் சில கட்சிகளுக்கும் பேரினவாத சக்திகளுக்கும் பதற்றத்தை ஏற்படுத்த ஆரம்பித்திருக்கின்றன. இதனால், எம்மையும் எமது பரப்புரைகளையும் முடக்குவதற்குத் தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலிப் பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கிய எமது ஆதரவாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். நான்விடயத்தை அறிந்து நேரில் சென்று பொலிஸாருடன் வாக்குவாதம் செய்ததைத் தொடர்ந்தே அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால், அதே பகுதியில் இதர கட்சிகளின் பரப்புரைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. எம்மை முடக்குவதற்கு எத்தனை கீழ்த்தரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பாருங்கள் எத்தனை தடைகள் வந்தாலும், எத்தனை இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டாலும் அத்தனையும் தாண்டி நாம் வெற்றிபெறுவோம் - என்றார். (அ-ம-26-20)

## மக்களுக்காக...

வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மணிவண்ணன் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தலில் புதியவர்களுக்கு மக்கள் வாக்களிப்பர். தகுதியான புதியவர்களை நாடாளுமன்றுக்கு அனுப்புவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. ஏனெனில் முன்னர் நாடாளுமன்றத்தில் இருந்து தமிழ் மக்களை ஏமாற்றாத ஒரே அணியாக நாமே இருக்கிறோம்.

தேசிய மக்கள் சக்தியில் யார் போட்டியிடுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. அவர்கள் என்ன செய்தார்கள் என்றும் யாருக்கும் தெரியாது. போட்டியிடுபவர்களுக்கும் தெரியுமோ தெரியாது.

தமிழ் மக்களுக்காக சேவையாற்றிய இளையோருக்கு இம்முறை தேர்தலில் மக்கள் வாக்களிக்கவேண்டும். தேசிய மக்கள் சக்தி ஒரு ஏமாற்று மாயை என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இம்முறை மக்கள் மத்தியில் மான் சின்னத்துக்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது - என்றார். (அ-ம-20-26)

## தேசியத்தின்...

பாதையில் பயணிக்கும் மாம்பழச் சின்னத்துக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று மாம்பழச் சின்ன சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக தலைவரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட முடிவெடுத்தது. கூட்டமைப்பு தனி மனிதச் செயற்பாடு அல்ல. கட்சி தனிநபரின் நிறுவனமாகி விட்டது. தமிழ்த் தேசியத்துக்காக யாராவது பாடுபட்டால் அவர்கள் வெளியேற்றப்படுவர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பிரிந்து பிரிந்து செயலிழந்துவிட்டது.

மக்களுடைய தமிழ்த் தேசியத்தை மூலதனமாகி விட்டு தமது பொருளாதாரத்தை பார்க்கின்றனர். வெளிநாட்டில் இருந்து கட்சிக்கு வந்த நிதி பற்றி கேள்வியெழுப்பிய விமலேஸ்வரி கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். பதவியும் பணமும் இந்தக் கட்சியை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது.

ஏன் விலகினீர்கள் எனப் பலரும் கேட்கின்றனர். அழியப்போகும் கட்சியில் தொடர்ந்து இருக்கமுடியாது. அது வரலாற்றுத் தவறு. மாவை சேனாதிராஜாவும் சிறீதரனும் செயலிழந்துவிட்டனர். கட்சியில் நான் ஒருபோதும் காணாதவர்கள் தற்போது வேட்பாளர்களாக உள்ளனர். தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தால் சுமந்திரனே தெரிவாகுவார். மாற்றம் வர வேண்டும் என்பதற்காக மாற்றானுக்கு வாக்களிக்கமுடியாது. அனைவரும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளுக்கு வாக்களிக்கவேண்டும். அந்த வகையில் எமது மாம்பழம் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் - என்றார். (அ-ம-26-20)

## மக்களின்...

தேடுகின்றார்கள். மக்களின் நம்பிக்கைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய கொள்கையோடும், செயலாற்றலோடும் நாம் இருப்பதால் நிச்சயமாக வெல்வோம் என்று சுயேச்சைக்குழுவில் ஊஞ்சல் சின்னத்தில் போட்டியிடும் நாகரத்தினம் கமலரூபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் கட்சிகளும், அவற்றின் தலைமைகளும் ஆளுமையற்றுச் செயற்பட்டதால் மக்களைப் போலவே எனக்கும் அவற்றில் நம்பிக்கையில்லை. தற்போது மக்கள் பிரபலமான அரசியல்வாதிகளை விடுத்துத் தமக்கு நல்லது செய்யக்கூடிய புதியவர்களையே தேடுகின்றார்கள். மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடிய கொள்கையோடும், செயலாற்றலோடும் நாம் இருப்பதால் நிச்சயமாக ஒரு ஆசனத்தையேனும் கைப்பற்றுவோம். மக்களிடம் எமது கொள்கைகள் சரியான வகையில்சென்றடைந்தால், சிலவேளைகளில் இரண்டு ஆசனங்கள் கிடைக்கவும் வாய்ப்புண்டு. மேலதிகமாக ஒரு ஆசனம் கிடைத்தால், அதனை ஒரு ஆளுமையுள்ள பெண்ணுக்கு முதலில் வழங்குவதோடு, பின்னர் 11 தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைச் சுழற்சி முறையில் வகிக்கும் வகையில் சில ஏற்பாடுகளை செய்வேன்- என்றார். (அ-ம-20-26)

## 13 ஆரம்பப்...

பதற்கு முற்படுகின்றனர். அது ஆரம்பப்புள்ளியல்ல. மாறாக இறுதிப்புள்ளி என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இறுதிக் கட்டத் தேர்தல் பரப்புரை நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இறுதிப்போரின் போது 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் போரை நிறுத்துவதாகத் தெரிவித்து தேசியத் தலைவரை அணுகினார்கள். ஆனால், தலைவர் அதைத் திட்டவட்டமாக மறுத்தார். ஏனெனில், 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், தீர்வு வழங்கப்பட்டுவிட்டதாக ஒரு பிம்பம் தோற்றுவிக்கப்படும். ஆனால், உள்ளே ஒன்றும் இருக்காது. அனைத்தும் செத்துவிடும். போராடி உயிரிழக்கலாம். ஆனால், எம்மை எடுத்துக்கொள்ளுங்கள் என்று எம்மை நாமே ஒப்படைக்க முடியாது என்பது தலைவரின் நிலைப்பாடு. ஆதலால்தான், நாங்கள் முழுமூச்சாக 13ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றோம். எனவே, தமிழ்த் தேசியத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டுமாயின், உங்களின் தெரிவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்க வேண்டும் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாணிச்சூரில் நேற்று இரவு தேர்தல் வன்முறை; ரிஷாத்தின் வாகனத் தொடரணி மீது தாக்குதல்!

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று இரவு தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. ரிஷாத் பதியூதீன் மற்றும் ரிஷாத் ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு இடையிலேயே இந்த வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் பிரதான வீதிக்கு அருகாக நேற்று மாலை 8 மணியளவில் காதர் மஸ்தானின் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது குறித்த பகுதிக்கு மோட்டார்சைக்கிளில் வந்த சிலர் பொதுக்கூட்டத்தை பார்த்து கூச்சலிட்டுவிட்டுச் சென்றிருந்தனர்.

சற்று நேரத்தில் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியூதீனும் அவரது ஆதரவாளர்களும் பயணித்த வாகனத் தொடரணிகள் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த பகுதிக்கு அருகே உள்ள பிரதான வீதிக்கு வந்தன. இதனால் இருதரப்பு ஆதரவாளர்களுக்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டதுடன் சற்றுநேரத்தில் அது கலவரமாகியுள்ளது.

கலவரத்தில் ரிஷாத் பதியூதீனின் வாகனத் தொடரணி அடித்து நொருக்கப்பட்டது. அவர் வாகனத்துக்குள் இருக்கத்தக்கதாக அவரது வாகனம் முற்றுமுழுதாக அடித்து நொருக்கப்பட்டதுடன் அவரது ஆதரவாளர்களின் வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டன. சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (ம-110)




சித்தங்கேணி ஒன்றியத்தின் அனுசரணையுடன் சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் பரிசளிப்பு விழா, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையின் தலைவர் திருச்சிற்றம்பலம் ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன் கலந்து கொண்டார். (25-27)



இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு தேசிய மட்டத்தில் இரண்டு முதலிடங்கள் கிடைத்துள்ளன. தனி வாத்தியப் புல்லாங்குழல் போட்டியில் கீழ்ப்பிரிவில் இராஜேஸ்வரன் அனுராம், குழு இசை திரை இசைப்பாடல் போட்டியில் மத்திய பிரிவினர் ஆகியோர் முதலிடத்தை தனதாக்கினர். (ச-9)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் வீடொன்று வாடகைக்குத் தேவை.

077 919 1529

(cs 1798) (N-1)

**காணி குத்தகைக்குத் தேவை**

நிறுவனமொன்றுக்கு யாழ் புறநகர்ப் பகுதியில் இரண்டு பரப்பு அல்லது அதற்கு மேற்பட்ட காணி குத்தகைக்கு வேண்டும்.

(அரியாலை, நாவற்குழி, செம்மணி, நாவாந்துறை, காக்கைதீவு போன்ற இடங்கள்)

தொடர்புகளுக்கு:-

077 919 1529

(CS/1798 B) J-1

**ES Printers**

**2025ஆம் ஆண்டிற்கான நாட்காட்டிகள்**

உங்கள் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்து பல வர்ணங்களிலும் அச்சிட்டுத் தரப்படும்.

- பஞ்சாங்க நாட்காட்டிகள்
- அலுவலக பாவனைக்குரிய நாட்காட்டிகள்
- பட நாட்காட்டிகள்
- தினசரி நாட்காட்டிகள்

விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.




தொடர்புகளுக்கு:-

ES Printers

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

070 356 7811

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 26 . 06 . 1938

ஆண்டவன் அடியில் 10 . 11 . 2024



**மனுவேற்பிள்ளை அருளப்பு (மரியதாஸ்)**

**(சித்திரா அச்சக உரிமையாளர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மத்தி ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை அருளப்பு அவர்கள் நேற்றுமுன்தினம் (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சோமசுந்தரம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நல்லையா, மரியாம்பிள்ளை, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மரியமதலேனா (ராணி) அவர்களின் பாசமிகு கணவரும், லூசியா (சித்திரா - லண்டன்), பமிலா (சந்திரா - லண்டன்), இந்திரா (கனடா), செசிலியா, அல்பிறற் (செல்வம்), சுதாகர் (லண்டன்), யேசுதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தராஜன் (லண்டன்), ஸ்ரிபன் (லண்டன்), யேசுதாசன் (கனடா), றமேஸ், சாரதாதேவி, சோயினி (லண்டன்), மாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிறிஸ்ரெல்லா, ஸ்ரெபான், டிலன், டன்சிசெறினா, டன்சன், ஸ்ரெபானி, யாஸ்மின், றோஷன், ஏற்றியன், சுபறம்யாஏற்றினி, விதுஷன், கானுஷன், யானுஷன், கபிலன், பற்றிக், யஸ்ரின், லவின், கவிஷா ஆகியோரின் பேரனும், சஸ்மிகா, சஸ்விக், கேலன், செரிக்கா, அமரிகாட்டர் ஆகியோரின் பூட்டனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் நாளை (13.11.2024) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஏழாலை கிழக்கு, இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல் : குடும்பத்தினர்
076 551 6743 (மகன்)
077 994 6376

(CS/1823) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org